**செய்தி வெளியீடு எண்: 854** **நாள்:11.11.2020**

**<u>இன்று (11.11.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்தும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அறிவித்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கம்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்று படிப்படியாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தவரை ஒன்றரை மாதத்திற்கு முன்பு அதிகமான அளவில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் இருந்தது. அரசு அறிவித்த ஆலோசனைகளை பின்பற்றி, மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித் துறை இணைந்து துரிதமாக பணியாற்றியதன் விளைவாக கொரோனா வைரஸ் பரவல் குறைக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்காக மருத்துவமனைகளில் தேவையான படுக்கை வசதிகள் தயார் செய்யப்பட்டுள்ளதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளோம். தேவையான மருத்துவ உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளது. கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்கு உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ நிபுணர் குழு வழங்குகின்ற ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணிபுரிகின்ற நம்முடைய மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் அதனை பின்பற்றிய காரணத்தினால், இந்த வைரஸ் நோய்த் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நோய் தொற்றை கட்டுப்படுத்த நாள்தோறும் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படுகின்றன. அதன்மூலம் நோய் அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்து, பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய

சிகிச்சை அளித்து குணமடைய செய்கின்றோம். இன்றையதினம் குணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகத்திலும் சரி, தூத்துக்குடி மாவட்டத்திலும், கொரோனோ வைரஸ் நோய்த் தொற்று பரவல் படிப்படியாக குறைந்து, இயல்பு நிலை திரும்புகின்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையை பொறுத்தவரை 100 சதவிகித பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளலாம் என்று அரசால் தளர்வுகள் அறிவிக்கப்பட்டு 100 சதவிகித பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக வேளாண் விளைச்சல் அதிகரித்துள்ளது. பருவமழையும் சாதகமாக பொழிந்த காரணத்தினால், விவசாயிகள் நல்ல விளைச்சலைப் பெற முடிந்தது.

அதேபோல தொழிற்சாலைகளுக்கும் படிப்படியாக தளர்வுகள் அறிவிக்கப்பட்டு தற்போது 100 சதவிகித பணியாளர்களுடன் தொழிற்சாலைகள் இயங்கலாம் என்று தளர்வு வழங்கி தொழிற்சாலைகளில் பணிகள் துவங்கியுள்ளன. பல்வேறு மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வந்து தங்கியிருந்து, தொழிற்சாலைகளில் பணிபுரிந்த வெளிமாநில தொழிலாளர்கள் கொரோனா வைரஸ் தொற்று பரவல் ஏற்பட்டவுடன் தங்கள் சொந்த மாநிலத்திற்கு செல்ல வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தன் அடிப்படையில் அவர்களை எல்லாம் அரசின் செலவிலேயே சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தோம். அதோடு, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை விலையில்லாமல் வழங்கினோம், உரிய மருத்துவ சிகிச்சையும் அளித்தோம். சில இடங்களில் அரசின் சார்பாக அவர்களை தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு, உடை, மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

இப்பொழுது தமிழகத்தில் படிப்படியாக கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவல் குறைந்து வருவதால், வெளிமாநில தொழிலாளர்கள் தமிழகத்திற்கு வந்து பணிபுரிய ஆர்வம் கொண்டுள்ள சூழ்நிலையில், பல தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மீண்டும் வெளிமாநிலத் தொழிலாளர்களை பணி அமர்த்தி வருகிறார்கள்.

தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தவரை வேளாண் தொழில், மீன்பிடித் தொழில், உப்பு உற்பத்தி தொழில் பிரதானமாக உள்ளன. உப்பு உற்பத்தி தொழிலை பொறுத்தவரை, தமிழகத்தில் உப்பு உற்பத்தியில் முதலிடம் வகிப்பது தூத்துக்குடி

மாவட்டம் ஆகும். மீன்பிடி தொழிலும் இங்கே அதிக அளவில் உள்ளது. மீனவர்களின் கோரிக்கைகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. கடல் அரிப்பை தடுப்பதற்கு தடுப்புச்சுவர், தூண்டில் வளைவுகள் போன்றவை கூடுதலாக அமைப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாணவர்கள் உயர்கல்வி படிப்பிற்காக புதிய கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக இன்று காலையில் அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சையின் மூலமாக சிகிச்சை அளிப்பதற்கு, உயர்தர மருத்துவ கருவிகளை மக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தேன்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவின் அரசு ஏரிகள், குளங்கள், ஊரணிகள் அனைத்தையும் தூர்வார வேண்டும் என்பதற்காக குடிமராமத்து திட்டத்தை அறிவித்து, அதனையும் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. இதனால் பல ஆண்டுகளாக தூர் வாராத ஏரிகள், குளங்கள் தற்போது தூர்வாரப்பட்டு, பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளோம். பருவக்காலங்களில் பொழிகின்ற மழை நீர் ஓடைகள் நதிகளின் வழியாக வீணாக கடலில் கலப்பதை தடுத்து தடுப்பணைகள் கட்டி, நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக மூன்று ஆண்டு கால திட்டமாக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. பொதுப்பணித் துறையின் சார்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு கட்டடப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பல கூட்டு குடிநீர் திட்டங்கள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல நிறைய புதிய திட்டங்களை துவக்க இருக்கின்றோம்.

திருச்செந்தூர் வட்டம், ஆலந்தலை கிராமத்தில் ரூபாய் 52.60 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் துவங்கப்பட உள்ளது. முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம் மக்கள் அரசு அலுவலர்களை சந்திப்பதற்கு பதிலாக, அரசு அலுவலர்கள் மக்களை சந்தித்து, அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று,

அவர்களுடைய பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தான் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை துவங்கி வைத்தேன். தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட நிர்வாகமும் அந்த பணியை சிறப்பாக செய்து வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் பெறப்பட்ட 12628 மனுக்களில் 5426 தகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது இலவச வீட்டு மனைபட்டா கோரி பெறப்பட்ட 4796 விண்ணப்பங்களில், தகுதியான 3225 மனுக்கள் ஏற்கப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டத்தில் அல்லிக்குளம் பகுதியில் புதிய தொழில் பூங்கா அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. விளாத்திகுளம் வட்டம், வைப்பார் கிராமத்தில் ஒரு தொழில் பூங்கா அமைக்க 1019 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் சிப்காட் நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பூங்காவின் மூலம் சுமார் ரூபாய் 2000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

சென்னை – கன்னியாகுமரி தொழில் பெருவழி திட்டத்தின் கீழ், திருச்செந்தூர் – பாளையங்கோட்டை வரை சுமார் 50 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இவ்வாறு பல திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளன என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்செந்தூர் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதி வேண்டும் என்று வைத்த கோரிக்கையையும் அம்மாவின் அரசு நிறைவேற்றி கொடுத்திருக்கிறது. சாத்தான்குளம் நகரத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக குடிமராமத்து திட்டத்தின் கீழ், பல குளங்கள், ஊரணிகள் தூர்வாரப்பட்டு இருக்கின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் 7707 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அதில் 92,504 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் இந்த குழுக்களுக்கு வங்கி இணைப்பு கடனாக ரூபாய் 635.96 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2020–21ஆம் ஆண்டிற்கு ரூபாய் 518 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூபாய் 140.23 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிருக்கு மானியத்துடன் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அம்மா வழியில்

செயல்படும் அம்மாவின் அரசு அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ் **2017–2018** முதல் **2018–2019**ம் ஆண்டு வரை **5023** நபர்களுக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு ரூபாய் **12.57** கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த **2019–2020** ஆண்டில் **2,013** மகளிருக்கு **5.05** கோடி ரூபாய் இரு சக்கர வாகன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி நகராட்சியில் **95** கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ், பகுதி சார்ந்த வளர்ச்சி (Area Based Development) பகுதிகளில் உள்ள **35** ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், **143.60** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதியாதாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

‘‘ஜல் ஜீவன் மிஷன்’’ திட்டத்தின் கீழ் **2020–21**ஆம் ஆண்டில் **226** ஊராட்சிகளில் உள்ள **875** குக்கிராமங்களில் **1** லட்சத்து **43** ஆயிரம் வீடுகளுக்கு **71.70** கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பு வழங்கிட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு பல திட்டங்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது இன்னும் பல்வேறு திட்டங்களை இந்த மாவட்டத்திற்கு கொண்டுவருவதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற செய்தியைக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**